செ.வெ. எண்: 425 நாள்: 7.7.2011

# கலை பண்பாட்டுத்துறை
# தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை
# தேசிய பாலஸ்ரீ விருதுக்கான சென்னை மாவட்ட அளவிலான போட்டிகள்
# செய்தி குறிப்பு

கலைகளில் புதுமை படைத்திடும் குழந்தைகளை ஊக்கப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் தேசிய இளந்திரு (National Bal Shree Honour) எனும் தேசிய விருது குடியரசு தலைவரால் வழங்கப்பட்டு வருகின்றத. இவ்விருது மேடைக்கலை (Creative Performance) அறிவியற்கலை (Creative Innovative Science) படைப்புக்கலை (Creative Art) மற்றும் எழுத்துக்கலை (Creative Writing) ஆகியவற்றில் புதுமைகள் படைத்திடும் கற்பனை திறமையுடைய 9 லிருந்து 16 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு வழங்கப்படுகிறது. தேசிய இளந்திரு (National Bal Shree) விருது தெரிவு உள்ளூர் அளவில் மண்டல அளவில் மற்றும் தேசிய அளவில் என மூன்று கட்டங்களாக நடைபெறும்.

சென்னை மாவட்ட அளவிலான தேசிய இளந்திரு விருது தெரிவுகள் சென்னையில் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் மூலம் 3 இடங்களில் நடைபெற உள்ளன. சென்னை – 4, மயிலாப்பூர், லஸ் அவென்யூவில் (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தில் 15.7.2011 அன்று காலை 9.30 மணி முதல் மேடைக்கலையிலும், அறிவியற்கலையிலும், 16.7.2011 அன்று காலை 9.30 மணி முதல் எழுத்துக்கலையிலும் படைப்புக்கலையிலும் தெரிவுகள் நடைபெற உள்ளன.

சென்னை – 118, வியாசர்பாடி, கிருஷ்ணமூர்த்தி நகரிலுள்ள விஸ்டம் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 23.7.2011 அன்று காலை 9.30 மணி முதல் மேடைக்கலையிலும், அறிவியற்கலையிலும், 24.7.2011 அன்று காலை 9.30 மணி முதல் எழுத்துக்கலையிலும் படைப்புக்கலையிலும் தெரிவுகள் நடைபெற உள்ளன.

சென்னை – 28, டாக்டர் டி.ஜி.எஸ் தினகரன் சாலை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி வளாகத்திலுள்ள தாகூர் கரையரங்கில் 30.7.2011 அன்று காலை 9.30 மணி முதல் மேடைக்கலையிலும், அறிவியற்கலையிலும், 31.7.2011 அன்று காலை 9.30 மணி முதல் எழுத்துக்கலையிலும் படைப்புக்கலையிலும் தெரிவுகள் நடைபெற உள்ளன.

*************************************************************************************************

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**